# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 165/2024 நாள்.07.02.2026

### DW2- திருமதி.தர்மதேவி , க/பெ. திரு.திருமேனி

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்குபோட்ட வாதி எனக்கு என்ன உறவு என்றால் மூத்தமகன். 1ஆம் பிரதிவாதி இளைய மகன் என்றால் ஆமாம், 3, 4 பிரதிவாதிகள் எனது மகள் என்றால் ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ஆம் வகுப்பு. வாதி எதற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் எனது கணவர் என்னிடம் பேசிவிட்டு அவருக்கு சொந்தமான சொத்தை எனது பேரனுக்கு உயில் எழுதி வைத்தார் அது தவறு என்று என் மகன் வழக்கு போட்டுள்ளார். அந்த சொத்து யாருக்கு சொந்தம் என்றால் நானும் என் கணவரும் வாங்கியதுதான். எனது கணவர் என்ன தொழில் செய்தார் என்றால் போலிஸாக வேலை பார்த்தார், அவர் ஓய்வு பெற்றாரா என்றால் விருப்ப ஓய்வு பெற்றார். எந்த ஆண்டு என்றால் 1990. என்னவாக வேலை பார்த்தார் என்றால் பதிவு உயர்வு வேண்டாம் என்று சொல்லிவிட்டு போலிஸாகவே இருந்தார். போலிஸாகவே சேர்ந்து போலிஸாகவே ஓய்வு பெற்றார். எப்போது எங்களுக்கு திருமணம் என்றால் 1969. எனக்கு என்ன ஊர் என்றால் வேதாரண்யம். என் உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் 9பேர். எனக்கு அண்ணன் தம்பி இரண்டுபேர் என்றால் இருவரும் எனக்கு தம்பிதான்.என் கணவர் 10 ஏக்கர் நிலத்தை நிர்வாகம் செய்திருப்பாரா என்றால் ஆமாம். எனக்கு ஒரு குண்டுமணி கூட எழுதி வைக்கவில்லை என்றால் பென்சன் வருகிறது அதனால் எழுதி வைக்கவில்லை. என் கணவர் பணியால் வந்த பென்சனா என்றால் ஆமாம். பென்சன் வந்ததால்தான் எனக்கு எழுதிவைக்கவில்லையா என்றால் ஆமாம். என்னுடைய திருமணம் காதல் மூலம் குடும்பத்தார் ஒத்துகொண்டு செய்தது என்றால் ஆமாம். வாதி ரவிசந்திரன் காதல் திருமணம் என்றால் ஆமாம். அவர் மனைவியும் எங்கள் ஊர் என்றால் இல்லை பக்கத்தில் வேறு ஊர். எனக்கு அவர்களை தெரியும் என்றால் தெரியாது. எனது கணவர் வாரிசுகள் எல்லோருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததை நான் ஒப்புகொண்டேன் என்றால் ஆமாம். அவரவர்களுக்குரிய பங்கை செட்டில்மெண்டாக எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். என் கணவர் இறக்கும்போது வயது என்ன என்றால் 80. அதற்கு 5வருடங்களுக்கு முன்பிருந்தே படுத்தபடுக்கை என்றால் இல்லை நன்றாகதான் இருந்தார். செட்டில்மெண்ட் எழுதியபோது என்னையும் வைத்து எழுதினார் என்றால் ஆமாம். தனபாக்கியத்தம்மாள் யார் என்றால் எனது மாமியார். அவருடைய கணவர் பெயர் என்ன என்றால் வீரையன். எனது மாமனார் என்ன

தொழில் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் திருமணமாகி வரும்போது மாமனார் மாமியார் இருந்தார்களா என்றால் மாமனார் இல்லை மாமியார் மட்டும் இருந்தார். வாதி வழக்கு போட்ட இடத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து தொடர்பாகதான் பேரனுக்கு எனது கணவர் உயில் எழுதினார் என்றால் ஆமாம்.செட்டில்மெண்டிற்கு பிறகு தமக்கு வைத்திருந்த சொத்தை உயிலாக எழுதியுள்ளார் என்றால் ஆமாம். தனபாக்கியத்தம்மாளுக்கும், வீரையனுக்கும் எனது கணவர் ஒருவர்மட்டும்தான் வாரிசா என்றால் ஆமாம். உயில் எழுதி வைத்ததில் உள்ளது கணவர் சொத்து மட்டும் மாமியார் சொத்தா என்றால் மாமியார் சொத்து அல்ல, எனது கணவர் சொத்துதான். கிரைய பத்திரம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. முதலில் தயார் செய்தது திருமேனி நகர் என்றால் ஆமாம். அதன்பிறகு திருமேனி நகர் விரிவாக்கம் என்றால் ஆமாம். திருமேனி நகர் விரிவாக்கத்தில் உள்ளதுதான் தாவா சொத்து என்றால் ஆமாம். தனபாக்கியத்தம்மாள் நகர் என்று போடபட்டதா என்றால் மாமியார் பெயரில் நாங்கள் சொத்தை வாங்கியிருந்தோம் அது அவர் பெயரில் இருந்தது அதுதான் தனபாக்கியத்தம்மாள் நகர். அந்த சொத்தை எனது மாமியார் வாங்கினார் என்றால் இல்லை நானும் என் கணவரும் வாங்கினோம். கிரைய பத்திரம் படித்துள்ளேனா என்றால் அதைநான் பார்க்கும் பழக்கம் இல்லை. வழக்கை நடத்துவது எனது சிறிய மகன் என்றால் ஆமாம். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரத்தை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் வழக்கறிஞர் கேட்ககேட்க நான் சொன்னேன். அதன் அடிப்படையில் தயார் செய்யபட்டது என்றால் ஆமாம். பின்பு நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். என் மாமியார் பெயரில் 1970, 1972இல் சொத்து வாங்கியுள்ளார் என்றால் எனது நகைகளை விற்று என் மாமியார் பெயரில் சொத்து வாங்கினோம். நான் அதை கட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் பெயரில் சொத்து உள்ளதா என்றால் நாங்கள் வாங்கினோம். எப்போது வாங்கினோம் என்றால் 1977. தற்போது என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம்தான் அதுவா என்றால் சரியல்ல. 1977 சொத்து வாங்கியதா சொல்வது உண்மையல்ல என்றும், 1990இல் ஒய்வு பெற்றபிறகு அவர் பெயரில் சொத்து வாங்கினார் என்றும் சொன்னால் 1977இல் வாங்கினார். நான் தற்சமயம் எங்கு வசிக்கிறேன் என்றால் காட்டுத்தோட்டத்தில் வசிக்கிறேன். அந்த வீடு யாருக்கு சொந்தம் என்றால் பெரியபையனுக்கு எழுதி கொடுத்தது, நான் உயிருடன் இருக்கும் வரை அதில் வசிக்கவும், மரங்களை பயன்படுத்திகொள்ளவும் எனக்கு அனுமதி உள்ளது. அந்த வீடு தரைதளம், முதல்தளம் உள்ளது என்றால் ஆமாம். அந்த வீட்டில் நான் மட்டும் தரைதளத்தில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். முதல் தளத்தில் வாதி

குடும்பத்துடன் வசிக்கிறார் என்றால் ஆமாம். நான் சமைத்து சாப்பிடுவேனா என்றால் நானும் சமைத்து சாப்பிடுவேன், சின்ன பையன் வீட்டிலிருந்தும் கொடுப்பார்கள். பெரிய பையன் கொடுக்கமாட்டாரா என்றால் எனக்கும் அவருக்கும் பிடிக்கவில்லை. மேல்வீட்டில் என்ன செய்கிறார் என்றால் குடியிருக்கிறார்கள், பரதநாட்டியம் பள்ளி வைத்திருக்கிறார். வாதியின் மனைவி நட்டுவனார் என்றால் ஆமாம். வாதிக்கு நானும் என் கணவரும் சேர்ந்துதான் திருமணம் செய்து வைத்தோம் என்றால் இல்லை. அவர் திருமணம் எங்கு போய் செய்துகொண்டார் என்றால் தெரியாது. அந்த விபரங்கள் எனக்கு தெரியுமா சொன்னாரா என்றால் சொல்லவில்லை. வாதிக்கு குழந்தைகள் எத்தனை என்றால் 2பெண்குழந்தைகள். முதல் பெண்ணுக்கு திருமணமாகிவிட்டது என்றால் ஆமாம். திருமணத்திற்கு நான் போனேன் என்றால் அதற்குமட்டும்தான் போனேன். சின்ன பையன் எங்கு குடியிருக்கிறார் என்றால் திருமேனி நகர் விரிவாக்கத்தில் வசிக்கிறார். 1ஆம் பிரதிவாதி கௌதம் நகரில் வசித்தார் தற்போது திருமேனி நகரில்தான் வசிக்கிறார். அவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன், ஒரு மகள். சின்ன பையன் மகள் பெரிய பையன் மனைவியிடம் பரதநாட்டியம் கற்றுகொண்டது என்றால் ஆமாம். பரதநாட்டியம் மேலே நடத்துவதுதான் எனக்கு தொந்தரவாக இருந்தது என்று சொன்னேனா என்றால் ஆமாம். எனது கணவர் எழுதிய உயில் தொடர்பாக எப்போது தெரியும் என்றால் 1990. அது எழுதி வைத்தபோது எனது கணவர் சின்ன பையனுடன் வசித்தார் என்றால் ஆமாம். உயில் எழுதிய காலத்தில் எனக்கும் என் கணவருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் பேசுவேன், அவர் அங்கிருந்தார் நான் இந்த வீட்டில் இருந்தேன். என் கணவர் சின்ன பையன் வீட்டிற்கு போனது 2018 என்றால் ஞாபகமில்லை. 2018லிருந்து என் கணவருக்கு நான் சோறு போட்டதில்லை என்றால் சின்ன பையன் வீட்டில் சாப்பிடுவார். எனது கணவர் பேரனுக்கு உயில் எழுதிவைக்க என்ன காரணம் என்றால் அவரை சின்ன பையனும் அவரது மகனும்தான் பார்த்துகொண்டார். உயில் எழுதி வைத்தபோது சின்ன பையன் மகன் மைனர் நிலையில் இருக்கும்போது எழுதபட்டது என்றால் ஆமாம். உயில் எழுதி வைத்தது சம்மந்தமாக என் கணவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சொன்னார் கேட்டுகொண்டுதான் எழுதி வைத்தார். உயிலை படித்து பார்த்தேனா என்றால் பத்திரங்களை படிப்பதில்லை.1ஆம் பிரதிவாதி ராஜ்குமாருக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் ஞாபகமில்லை, நாங்கள்தான் செய்துவைத்தோம். திருமேனி நகர் காளையாரிடம் விற்கபட்டது என்றால் ஆமாம் அந்த பணத்தை கொண்டுதான் என் மகளுக்கு திருமணம் என்றால் இல்லை. காளையாரிடம் ரவிசந்திரன் பணம் வாங்கிகொண்டு ஈரோடு போய்விட்டார் என்று கட்சியில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளேன். உயிலில் யார்

சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் தெரியாது. உயில் பத்திரத்தை எழுத வைத்து பதிவு செய்தது என் சின்னபையன் என்றால் தெரியாது. உயில் என் கணவர் சுயநினைவில் இல்லாதபோது என் சின்னபையன் உயிலை பொய்யாக தயார் செய்து சாட்சியை தயார் செய்து பதிவு செய்தார் என்றால் இல்லை. முதல் விசாரணையில் எனது கணவர் முறையாக உயில் எழுதி வைத்துள்ளார் என்றும், தாவா தள்ளுபடி செய்யவேண்டும் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதி ஈரோட்டில் எத்தனை ஆண்டுகள் இருந்தார் என்றால் தெரியாது. வாதி மனைவி ஈரோட்டில் பள்ளியில் ஆசிரியராக இருந்தார் என்றால் ஆமாம். ஈரோட்டிலிருந்து வாதி வாரத்திற்கு ஒருமுறை வந்து செல்வார் என்றால் இல்லை எப்போதாவது வருவார். வாதி வாரவாரம் வந்துபோவார் என்றும் எனக்கும் என் கணவருக்கும் வேண்டியதை செய்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. பெரியார் காலேஜ்ஜில் வேலை பார்த்த ராமசந்திரன் தெரியுமா என்றால் தெரியும். அவர் எனது மாப்பிள்ளையின் அண்ணன். ராமசந்திரன் போய் வாதியை ஈரோட்டிலிருந்து சின்ன பையன் திருமணத்திற்கு அழைத்து வந்தார் என்றால் தெரியாது. சின்ன பையன் அவன் திருமணத்திற்காக வாதியை ஈரோட்டிலிருந்து கலந்து கொள்வதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது பேரன் அவனுக்கு உயில்படி கிடைத்த சொத்தை அவனுடைய அம்மாவுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். தாவா சொத்தில் வாதிக்கு பங்கு உண்டா என்றால் இல்லை.ஏன் இல்லை என்றால் எங்களுக்கு யார் நல்லது செய்கிறார்களோ அவர்களுக்குதான் கொடுக்கமுடியும். சின்ன பையன் வீட்டில் இருந்ததை பயன்படுத்தி கொண்டு ராஜ்குமார் எழுதி கொண்டார் என்றால் இல்லை. உயில் செல்லாது என்றும், உயில் அடிப்படையில் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் செல்லாது என்றும் அதனால் தாவாவில் கோரிபடி பங்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. ஞானம்நகரில் வாங்கிய பிளாட்டை விற்றுவிட்டாரா என்றால் என் கணவர் வாங்கவில்லை. ஆவணங்களுக்கு எதிராக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு கோரியபடி பாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.07 17:08:03 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.